நான் துதிக்கும் தேவனே மௌனமாய் இராதேயும்

O God of My Praise, Be Not Silent

Album 27 Song 1 | ஆல்பம் 27 பாடல் 1



Album 27

Justice, Kingship & Righteousness

Song 1 நான் துதிக்கும் தேவனே மௌனமாய் இராதேயும்

நான் துதிக்கும் தேவனே
மௌனமாய் இராதேயும்
துன்மார்க்கனுடைய வாயையும்
கபட்டு வாயையும் கட்டிடும்

பகையுண்டாக்கும் வார்த்தைகளால்
என்னை சூழ்ந்துகொண்டு
முகாந்தரமில்லாமல் என்னோடே
போர் செய்கின்றனர்

என் ஸ்நேகத்திற்கு பதிலாக
என்னை விரோதிக்கின்றனர்
நன்மைக்கு பதிலாக எனக்கு
தீமை செய்கின்றனர்

அவனை நியாயம் விசாரிக்கப்படும்போது
குற்றவாழியாக்கிடும்
அவன் ஜெபத்தை என்றென்றும்
பாவமாக்கிடும்

அவன் நாட்களை கொஞ்சமாக
குறைத்து போட்டிடும்
அவன் உத்தியோகத்தை
வேறொருவனுக்கு
கொடுத்திடும்

அவனுக்கு ஒருவரும் இரக்கம்
காண்பியாது
அவனுடைய பிள்ளைகளுக்கு தயவு
செய்ய வேண்டாம்

அவன் சந்ததியாரை நீரே
நிர்மூலமாக்கிடும்

இரண்டாம் தலைமுறையில் அவர்கள்
பேர்
அற்றுப்போகட்டும்

அவன் பிதாக்களின் அக்கிரமத்தை
நீர் நினைத்திடும்
அவன் தாயின் பாவங்கள்
நீங்காமலிருக்கட்டும்

அவைகள் நித்தமும் கர்த்தருக்கு
முன்பாய் இருக்கட்டும்
அவர்கள் பேர் பூமியிலிராமல்
நிர்மூலமாகட்டும்

நான் துதிக்கும் தேவனே
மௌனமாய் இராதேயும்
துன்மார்க்கனுடைய வாயையும்
கபட்டு வாயையும் கட்டிடும்


WHERE IS
YOUR GOD?
LIES